**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 6/2020 |
| | | P/W's | : | PW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. அழகர் | CASTE | : | |
| S/O | A. ராஜா | RELIGION | : | இந்து |
| VILLAGE | ஜெய்ஹிந்த்புரம் | CALLING | : | |
| TALUK | மதுரை | AGE | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.11.2025**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் வெண்ணிமுத்து அய்யனார் கோவிலில் 2ம் நிலை பூசாரி என்று நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தின் 1993 லிருந்து அனுபவத்தில் இருப்பதாக எனது சாட்சியத்தில் சொல்லியுள்ளதை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வெண்ணிமுத்து அய்யனார் கோவிலின் வடக்கு மற்றும் மேற்குப்புரமுள்ள 1ம்பிரதிவாதியின் இடத்தை அவர் வேலிபோட்டு அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல, மேற்குப்புரமுள்ள இடம் எங்கள் இடம்.

2. நாங்கள் கிரையம் பெற்ற இடத்தை சர்வேயர் வைத்து அளக்கவில்லை என்றால் சர்வேயர் அளக்கவந்தபோதுதான் பிரச்சனை வந்தது, இடத்தை அளக்கவில்லை. 08.09.2019 ந்தேதி கோவிலுக்கு சென்றபோது 1ம் பிரதிவாதி பசுமைதிட்டத்தின்கீழ் போலியாக உத்தரவு பெற்று கோவில் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்ட முயற்சி செய்வதாக சொல்லியுள்ளதை நிரூபணம் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவு போலியானது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. 1ம் பிரதிவாதி சட்டப்படியாக முறையான அனுமதி பெற்று அவர் இடத்தில் வீடு கட்டி குடியிருக்கிறார் என்றாலும் அதை நான் வழக்கிற்காக மறுத்துச்சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை அளக்காமல் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்வதாக தவறாக வழக்குப்போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் நாங்கள் தொடர்ச்சியாக அனுபவத்தில் இல்லாமல் நிரந்தர

உறுத்துக்கட்டளைப்பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் இடத்தை அபகரிக்க வழக்கு ஆவணங்களை பொய்யாக தயார் செய்து வழக்குப்போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

4. வழக்கில் தாக்கல் செய்துள்ள கடித ஆவணங்களை நான் தயார் செய்யவில்லை. நான் தயார் செய்யாத ஆவணங்களை சார்ந்து சாட்சியம் அளித்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு குறித்தும் அதன் ஆவணங்கள் குறித்தும் தெரியாமல் நான் சாட்சியம் அளிப்பது செல்லாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எங்களுக்கு எந்த இடையூறும் செய்யாமல் அவர் இடத்தில் வேலி போட்டு அனுபவம் செய்யும் நிலையை அவருக்கு எதிராக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி